[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒருமைப்பாடு என்பது அரசிய
10-00 லுக்கு அப்பாற்பட்டது என்று முன்பே தெரிவித்திருக்கிறேன்.
a. m. கனம் அங்கத்தினரைப் போன்றவர்களுக்குப் பிரிவினை அபிப்பிராயம் உண்டு என்றால், அத்தகையோருக்கு இதிலே இடமில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

பீடிகள் (ஏற்றுமதி)

* **1120 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாகிஸ்தானிலிருந்து வாங்கும் பஞ்சுக்குப் பதிலாக இந்தியாவிலிருந்து கொடுக்கும் நிலக்கரியோடு, தமிழ்நாட்டில் தயாராகும் பீடியையும் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காரை ராஜ்ய சர்க்கார் கேட்டுள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Soil Conservation Scheme

* **1121** *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to revise the rates of Rs. 15 and Rs. 17 being paid per unit under the soil conservation scheme; and

(*b*) if so, when?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி தொகுதியில் இம்மாதிரி யூனிட்டுக்கு 15 ரூபாய், 17 ரூபாய் என்று இருப்பது மிகக் குறைவாக இருக்கிறதென்றும் அதை உயர்த்தவேண்டுமென்றும் கோரிக்கை வந்துள்ளதா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு அதை உயர்த்த முடியாது என்று முடிவெடுக்கப்பட்டது.

சுதந்திரம் காக்கும் படை

* **1122 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திராவிடநாடு வாரம் கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை தடுத்து நிறுத்த "சுதந்திரம் காக்கும் படை" ஒன்று சென்னையில் நிறுவப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம். இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளன.

திரு. மு. கருணாநிதி : தேசிய சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக மேற்படி படையினர் தேசியக் கொடிகளைப் பிடித்துக்கொண்டு தங்கள் கட்சிக்கு எதிரான கட்சிகளின் கூட்டங்களில் ஆர்ப்பாட்டம் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசியக் கொடிகளை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்களா இல்லையா என்பது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. இந்தப் படையினரை ஒரு புதிய தேசியக் கட்சியாக அரசாங்கம் கருதவில்லை.

Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act

* 1123 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the **Hon. the** Minister for Industries be pleased to state—

(*a*) how far the Government have been successful in implementing the Beedi Industries Premises (Regulation of Conditions of Work) Act; and

(*b*) the steps taken to prevent the Trade Mark Beedi Proprietors from taking benami licences in the name of beedi agents and their workers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Only the licensing provisions of the Act are in force now and these have been implemented successfully. During the nine months of the year 1960-61, 1,830 licences were issued to the employers of beedi industrial premises and during the year 1961–62, 289 employers were granted licences besides 1,216 employers, whose licences were renewed.

(*b*) The matter is under the consideration of the Government.

MR. SPEAKER : I think the House has no objection to taking some more time to dispose of the remaining questions.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாடு

* *1124 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியில் திருச்சியில் நடந்த தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம்.

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம்

* *1125 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் ஜூலை கடைசி வாரத்தில் சென்னையில் கூடிய ராஜ்ய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்தனவா ?